# ஜெபம்

## முடிவுரை

ஜெபத்தைப் பற்றிய ஒரு படிப்பு தேவனைப் புரிந்துகொள்ளுதலாக உள்ளது. தேவன் தேவனாக இருக்கின்றார், மனிதன் அப்படியிருப்பதில்லை; தேவன் தேவனாகவே இருக்கின்றார், நான் அப்படி இருப்பதில்லை. ஆகையால், ஜெபத்தைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையானது நம்மைத் தாழ்த்து கிறது. இது தட்டிக்கொடுக்கும் பதில்களை விட அதிகமான கேள்விகளுடன் முடிகிறது. இது தீர்வுகளுடனல்ல ஆனால் தேவனுடனேயே முடிகிறது.

கிறிஸ்தவர்கள் தேவனைத் தேடுகின்றார்கள். நாம் அவரது சித்தத்தை அறிந்து கொள்ள அதற்குள் இருக்க விரும்புகின்றோம். இவ்விதமாக, ஜெபம் தேவனுடைய சித்தத்தை உள்ளடக்குகிறது. அடிக்கடி, நாம் அவருடைய சித்தத்தை எவ்வளவு அதிகமாகத் தேடுகின்றோமோ, அவ்வளவு குறைவாகவே நாம் அதை அறிகின்றோம். தேவன் அறிவாக மட்டும் இருப்பதில்லை; ஜெபம் என்பது வேதாகமமாகி விடுவதில்லை. ஆகையால் கேள்விகள் எஞ்சி நிற்கின்றன:

தேவன் நமக்காக ஏதேனும் சித்தம் கொண்டிருக்கின்றாரா? அந்த சித்தத்தை தேவன் வெளிப்படுத்துகின்றாரா அல்லது அதை ஒளித்து வைத்துள்ளாரா? அதைக் கண்டறிவதற்கு நாம் ஏன் இவ்வளவு வேதனை யுள்ள தூரங்களுக்குச் செல்லுகின்றோம்? நாம் இறையியலில் இருந்து ஆவிக் குரிய தன்மையைப் பிரித்து விட முடியுமா? நாம் இறையியல் இல்லாமல் தேவனை எதிர்கொள்ள இயலுமா? தேவனுடைய சித்தத்தைக் கண்டறிதல் என்பது வேத வசனரீதியான கருத்தாக உள்ளதா? “தேவனுடைய சித்தம்” என்பதற்கு வேதாகம ரீதியான விளக்கம் என்ன? தேவனுடைய சித்தத்தைக் கண்டறிய முயற்சிப்பதற்கு நாம் தவறான சிந்தனையைப் பயன்படுத்து கின்றோமா? வேதாகமம் இல்லாமல் நாம் தேவனுடைய சிந்தையை அறிய முடியுமா? “மயிருள்ள தோலை வெளியே போடுதல்” என்பது வீணானதாக இருப்பது ஏன்?

நாம் தேவனுடைய நம்பிக்கையின் பேரில் ஜெபிக்கின்றோம்! ஆபேல் தேவனை விசுவாசித்தார், அவர் [ஆபேல்] மரித்தார். ஏனோக்கு தேவனு டன் நடந்தார், அவர் மரிக்கவில்லை. நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்தார், மற்றும் எல்லாரும் மரித்தார்கள். நாம் எவற்றை நம்புகின்றோமோ, அவற்றினால் நமது வாழ்வு மாற்றப்படுகிறது. தேவனுடைய சித்தத்தைக் கண்டறிவதற்கு நாம் வேத வசனங்களை அறிய வேண்டும். தேவனுடைய சித்தத்தைக் கண்டறிவதற்கு நாம் தேவனை அறிய வேண்டும். நாம் தேவனைப் போல் இருக்கும்போது அவருடைய சித்தத்தை மேன்மையாகப் புரிந்துகொள்ளுகின்றோம் என்பது தெளிவு. ஜெபம் என்பது உறவு

*முறையை உள்ளடக்குகிறது . தேவனுடைய சித்தத்தைக் கண்டறிதல் என்பது - விசேஷித்த அடையாளங்களினால் அல்ல ஆனால் - அவருடனான என் உறவுமுறையின் அடிப்படையிலேயே அமைய வேண்டும். ஆகையால், அவரது சித்தம் என்பது மறைக்கப்பட்டதாகவோ அல்லது நழுவுகிற தாகவோ - ஒரு புதிராகவோ, புரிந்துகொள்ள முடியாத ஒரு விஷயமாகவோ - இருக்க வேண்டிய அவசியம் இராது. தேவன் அறிகின்றார்; தேவன் அறியப்பட வேண்டும் என்று விரும்புகின்றார். எளிய, குழந்தையைப் போன்ற, கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தில், தேவன் தமது சித்தத்திற்குள் நம்மை அனுமதிக்கின்றார். நம்மைப் பற்றி அறிந்துகொள்ளுதல் என்பது வேதனை மிகுந்ததாக உள்ளது. தேவனைப் பற்றி அறிந்து கொள்ளுதல் என்பது வேதனை மிகுந்ததாக உள்ளது, ஆயினும் அது என்ன ஒரு சிலாக்கியம்? ஆகையால் நாம் கீழ்ப்படிகின்றோம்; நாம் சரணடைகின் றோம்; நாம் சேவிக்கின்றோம். பின்பு பரலோகத்தின் தேவன் நமது எண்ணங்களுக்கும் அதிகமாகவே நம்மை ஆசீர்வதிக்கின்றார். நான் என் வாழ்வை வாழ்ந்திருக்கின்றேன். இல்லை, அது நான் சிந்தித்த வகையில், அது நான் திட்டமிட்ட வகையில் அமையவில்லை. ஆனால் இது மிக மேன்மை யானதாக - மிக மிக மேன்மையானதாக உள்ளது! தேவன் தேவனாகவே இருக்கின்றார்! தேவன் நல்லவராக இருக்கின்றார்! தேவனின்றி மக்கள் எவ்வாறு வாழ முடியும்?*

*“வேத வசனங்களில் நன்கு பழக்கமானவைகள் அதிகம் நெருக்கமாக வாசிக்கப்பட வேண்டும்’’ என்பதை நாம் கற்றிருக்கின்றோமா? நாம் தொடங்கிய இடத்திற்குத் திரும்புங்கள்: லூக்கா 11. நாம் எல்லாருக்காகவும் சீஷர்கள் பேசினார்கள்: ‘‘ஜெபம்பண்ண எங்களுக்குப் போதிக்க வேண்டும்.” இயேசு அந்த வேண்டுகோளுக்கு ஒரு ஜெபத்தைக் கொண்டு பதில் அளித்தார், அது “மாதிரி ஜெபமாக உள்ளது.” பின்பு அவர் இன்றைய நாட்களில் புறக்கணிக்கப்பட்டு தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிற, கிளர்ச்சியைத் தூண்டும் ஒரு உவமையைப் போதித்தார்: “மூர்க்கமான (பித்துப்பிடித்த) நண்பன்.”*

*கிறிஸ்தவர்கள் பிள்ளைகளாய் இருக்கின்றார்கள். பெற்றோர்கள், நள்ளிரவில் தங்கள் பிள்ளைகளின் தேவைகளையும் விருப்பங்களையும் கவனிக்க அன்புடையவர்களாய் இருக்கின்றார்கள். பிள்ளைகள் “கதவு களைத் தட்ட” வேண்டிய அவசியம் இல்லை. ஜெபம் என்பது “மூர்க்கமான (பித்துப்பிடித்த) நண்பர்களுக்கானது’’ அல்ல. ஜெபம் என்பது தங்கள் தந்தையர்களின் அன்பினுள் பாதுகாப்பாக இருக்கின்ற பிள்ளைகளுக் கானதாக உள்ளது. “பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” (லூக். 11:13).*

*“முதலாவது ஜெபியுங்கள்.”*